காரைக்கால் நகராட்சி
காரைக்கால்
*****

தேதி:02.01.2018

எண்:38/கா.ந/ஆக்/ உ.பொ-II/ஓ.எஸ்/2017-18

# <u>பத்திரிக்கைக் குறிப்பு</u>

காரைக்கால் நகராட்சி எல்லைக்குட்பட்ட திருநள்ளார் ரோடு மார்க்கெட் வீதிக்கு இடையில் முக்கோண வடிவிலான 529 சதுர மீட்டர் வார்டு-F, பிளாக்-1, டவுன் சர்வே எண்.2லிருந்து 14வரை, ரீசர்வே எண்.77/1 காரைக்கால் டவுனில் அமைந்துள்ள மேற்கண்ட விஸ்தீரணம் அரசு வருவாய் ஆவணங்கள்படி காரைக்கால் நகராட்சிக்கு சொந்தமானவை. இது புறம்போக்கு வகை நிலத்தை சார்ந்தவை.

இந்த விஸ்தீரணம் சம்பந்தமாக மனுதாரர் முத்தவள்ளி, பெரிய பள்ளிவாசல், காரைக்கால் மற்றும் காரைக்கால் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு இடையே நடைப்பெற்ற வழக்கு காரைக்கால் நீதி மன்ற வழக்கு எண்.O.S.33/89, சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண்.A.S.868/2006 மற்றும் டெல்லி உச்சநீதி மன்ற வழக்கு எண்.9448/2007 முதலிய நீதி மன்றங்களால் காரைக்கால் நகராட்சிக்கு மேற்கண்ட விஸ்தீரணம் சொந்தமானவை என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் மேற்கண்ட சொத்து நகராட்சிக்கு சொந்தமானவை என்பது உறுதியாகிறது. இதில் யாருக்கும் உரிமை கோர இயலாது. எனவே, நகராட்சிக்கு சொந்தம் என்று வரையறுக்கப்பட்ட விஸ்தீரணத்தை யாரும் விற்கவோ, வாங்கவோ, அனுபவிக்கவோ கூடாது. மேற்கண்ட செயல்களில் ஈடுபட்டாலோ, வில்லங்கம் ஏற்படுத்தினாலோ அவை சட்டத்திற்கு மீறிய செயலாகும் என்று காரைக்கால் நகராட்சி ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்படுகிறது. இதை மீறினால் நகராட்சி சட்ட விதிகளின்படி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆணையர்
காரைக்கால் நகராட்சி